## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

## அசல் வழக்கு எண். 232/2019

பெயர் : செல்வேந்திரன் P.W.1. Cross continuation

த/பெ. : ரெத்தினசாமி

தேதி : 23.03.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி: –**

1. தாவா 1வது அயிட்ட சொத்தான புல எண். 111/2, 113/13 ஆகிய இரு சொத்துகளை 1 மற்றும் 3 பிரதிவாதிகள் சேர்ந்து 2ம் பிரதிவாதிக்கு பாக விடுதலை பத்திரம் மூலம் 06.01.2020ல் கொடுத்துவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 4வது அயிட்ட சொத்தான புல எண். 127/17 ஐ 1 மற்றும் 3 பிரதிவாதிகள் சேர்ந்து 2ம் பிரதிவாதிக்கு பாக விடுதலை பத்திரம் மூலம் 12.11.2018ல் கொடுத்துவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து அனைத்தும் பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருப்பதால்தான் 1, 3 பிரதிவாதிகள் 2ம்பிரதிவாதிக்கு மேற்படி சொத்துகளை பாக விடுதலை பத்திரம் மூலம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கில் தாவா சொத்துகளை பொறுத்து இடைமனு எண். 1064/2018 ஆனது முழு விசாரணைக்கு பின்னர் 17.12.2018 அன்று ஏற்கனவே கொடுத்த இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு நீக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து நான் எந்த மேல் முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து அனைத்தும் பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருப்பதால் தான் நான் மேற்படி உத்தரவை எதிர்த்து மேல் முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது வசத்தில் இருப்பதால் நான் மேல்முறையீடு செய்யவில்லை.

3. தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதை காண்பிப்பதற்கு 2018 ஆண்டுக்கு முன்போ அல்லது அதற்கு பின்போ எந்த வருவாய் துறை ஆவணமோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இதிலிருந்தே தாவா சொத்தானது வழக்கு தாக்கல் செய்த காலத்திலும் அதற்கு பின்னரும் எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதுவும் எனது அனுபவத்தை நிரூபிக்க கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

4. தாவா சொத்தில் உண்மையான உரிமையாளரான பிரதிவாதிகளுக்கு எதிராக நான் உறுத்துகட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. இது நாள் வரை தாவா சொத்து பிரதிவாதிகள் வசத்தில் உள்ளது என்றாலும், அதை நான் மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது சாட்சியம் எனது கட்சிக்கு விரோதமாக உள்ளதால் எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.